பக்கங்கள்: 08

காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 11 சனிக்கிழமை 24.04.2021 கதிர் 38

கிளிநொச்சி ஆனந்தபுரத்தில் குடியிருப்புக்குள் சிறுத்தை!

(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி ஆனந்தபுரம் கிழக்குப் பகுதியில் கிராமத் திற்குள் நுழைந்த சிறுத்தை யினால் அப்பகுதியில் பரபரப்பு நிலவியது. இதனை அடுத்து அந்த பகுதிக்கு அழைத்து வரப் பட்ட வன ஜீவராசிகள்

2

ரிஷாத், ரியாஜ் மீண்டும் கைது

அதிகாலை சி.ஐ.டி. அதிரடி

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலை வரும் ஜக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதி யுதீன் மற்றும் அவரின் சகோதரரான ரியாஜ் பதியுதீன் ஆகியோர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைதுசெய்யப்பட்டுள் ளனர்.

2

ராஜபக்ஷ அரசின் கொடூர இராணுவ முகம் அம்பலம்

ரிஷாத் கைதுக்கு மனோ கண்டனம்

அகில இலங்கை மக்கள் காங்கிர ஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் கைதுக்கு எதிராக தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணே சன் எம்.பி. கடும் கண்டனம் வெளியிட் டுள்ளார். இது தொடர்பான அவரின் முகநூல் பதிவில் -

நாடாளுமன்ற உறுப்பினர், கட்சித் தலைவர் ரிஷாத் பதியுதீனை இந்த ரம ழான் மாதத்தில் அதிகாலை 3 மணிக்கு வீடு புகுந்து, தலைமறைவாக வாழும் பாதாள உலகக் கேடியை இழுத்துச் செல்வதைப் போல் கைது செய்ததன் பின்னுள்ள ஆவேசம் என்ன? ராஜபக்ஷ அரசின் கொடூர இராணுவ முகம் வெளிப்படுகின்றதா? - என்று குறிப்பி டப்பட்டுள்ளது.

இலங்கையில் அரசியல் பழிவாங்கல் தாராளம்!

கூட்டமைப்பு எம்.பி. ஜனா எடுத்துரைப்பு

இலங்கையில் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகள் தாராளமாக இடம்பெற்று வரு கின்றன என்று தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் மட்டக்க ளப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கரு ணாகரம் (ஜனா) தெரிவித் தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அரசியல் பழி

வாங்கல்கள் தொடர்பான விவாதத்தில் உரையாற் றுகையிலேயே

2

வேற்றுமையைக் களையாவிடின் அரசைக் காப்பாற்றவே முடியாது!

அமைச்சர் விமல் சுட்டிக்காட்டு

அரசுக்குள் இருக்கின்ற வேற்றுமைகளை ஜனாதி பதியும், பிரதமரும் உடன் களையவேண்டும். இல் லையேல் அரசை எவரா லும் காப்பாற்ற முடியாது என ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன

2

மே தின நிகழ்வுக்குத் தடை:

அரசின் தீர்மானத்தை சவாலுக்கு உட்படுத்த விரும்பவில்லையாம்!

மைத்திரி கூறுகின்றார்

மே தின நிகழ்வுகளுக்கு தடை விதித்து அறிவிக்கப்பட்டுள்ள தீர் மானத்தை நாம் சவாலுக்கு உட் படுத்தப் போவதில்லை என்று மு ன் ன ா ள் ஜ ன ா தி ப தி யு ம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2

திரிபடைந்த வீரிய வைரஸே பரவுகிறது

இலங்கையில் தற்போது இனங் காணப்படும் தொற்றாளர்கள் உரு மாறிய புதிய வகை வைரஸ் தாக்கத் திற்கு உள்ளாகியுள்ளனர். இது முன் னர் காணப்பட்ட வைரஸிலிருந்து முற்றிலும் வேறுபட்ட தன்மையுடை யது என்பதோடு, கடும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதுமாகும் என்று ஸ்ரீஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகத் தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவப் பிரிவு பேராசிரியர் நீலிகா மலவிகே தெரிவித்தார்.

2

உயர் பட்டப் படிப்பு பீடத்தின் பீடாதிபதியாக கண்ணதாசன்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்.24

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடத்தின் பீடாதிபதியாக மருத்துவ பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர்

3

இலங்கை உள்ளிட்ட 5 நாடுகளில் இருந்து சவுதி அரேபியாவுக்குப் பயணிக்கத் தடை

இலங்கை, இந்தியா உள்ளிட்ட 5 நாடுகளில் இருந்து பயணிகள் சவுதி அரேபியாவுக்குச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸின் மூன் றாவது அலை தீவிரமாகப் பரவி வருவதைக் கருத்தில்கொண்டு, சவுதி விமானப் போக்குவரத்து அதி கார சபை இன்றிலிருந்து மறு அறி வித்தல் வரை இவ்வாறு தடை விதித்துள்ளது.

பாகிஸ்தான், இந்தோனேஷியா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகியன ஏனைய நாடுகளாகும்.

சவுதி அரேபிய

2

இலங்கையில் மூன்று மாவட்டங்களில் கொரோனா தீவிரமாகப் பரவும் ஆபத்து

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

இலங்கையின் மூன்று மாவட்டங் களில் கொரோனா வைரஸ் தீவிரமாகப் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது என இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பு, கம்பஹா மற்றும் குருநா கல் ஆகிய மாவட்டங்களில் நாளாந்தம் அதிகமான கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர் என்று இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

இலங்கையின் ஏனைய பிரதேசங்க ளிலும் கொரோனாக் கொத்தணிகள் உரு வாகும் அபாயம் உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் நாள்கள் மிக ஆபத்தானவை என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள அவர், நாட் டில் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்ப டாமைகுறித்துகவலைவெளியிட்டுள்ளார்.

நாட்டில் பயணக் கட்டுப்பாடுகள் விதிக் கப்படாத நிலையில், பொதுமக்கள் 100 வீதம் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் மாலைப்பதிப்பு

வேற்றுமையைக் களையாவிடின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னணியின் பங்காளிக் கட்சியான தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

அரசின் தீர்மானத்தை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பங்காளிக் கட்சிகளுடனான கலந்துரையாடலின் பின்னர் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டத்தில் மே தின நிகழ்வை நாம் தனியே நடத்துவது என்று அறிவித்திருந்தோம். ஆனால், மே தின நிகழ்வுகளுக்கு அனுமதியில்லை என்று அரசு அறிவித்துள்ளது. ஜனாதிபதியின் மேற்பார்வையில் இயங்கும் கொரோனாத் தடுப்புச் செயலணியே இந்த அறிவித்தலை விடுத்துள்ளது.

கட்சிகளின் பிரதிநிதிகளுடன் இந்தச் செயலணி இது தொடர்பில் கலந்துரையாடியிருந்தது. அதன் பின்னர் மே தின நிகழ்வுகளுக்கு தடை விதித்துள்ளது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். கொரோனாதான் காரணம் எனில் அதை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பேரணிகள் அல்லாமல் சிறு கூட்டங்களுடனாவது அந்த நிகழ்வை நடத்துவதற்கு அரசு அனுமதித்திருக்கவேண்டும்.

அரசின் இந்தத் தீர்மானத்தின் பிரகாரம் அரசுக்குள் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன என்று எதிரணியினரும், ஊடகங்களும் செய்திகளை வெளியிட்டு வருகின்றன. இது மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. எனினும், அரசு எடுத்த இந்தத் தீர்மானத்தை சவாலுக்கு உட்படுத்த விரும்பவில்லை - என்றார்.

இலங்கை உள்ளிட்ட .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடிமக்கள் மேற்படி நாடுகளுக்குப் பயணம்செய்வதும்தடைசெய்யப்பட்டுள்ளது.

சவுதி அரேபியா பிரஜைகள் குறித்த நாடுகளில் இருந்தால், அவர்கள் 72 மணி நேரத்துக்குள் நாட்டை வந்தடைய அவகாசமும் வழங்கப்பட்டுள்ளது.

ரிஷாத், ரியாஜ் மீண்டும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கமைய இருவரும் இன்று அதிகாலை கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடைய தாக்குதல்தாரிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியமை மற்றும் அவர்களுடன் தொடர்புகளைப் பேணிய குற்றச்சாட்டிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

முன்னால் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன், கொழும்பு பௌத்தாலோக மாவத்தையிலுள்ள அவரது வீட்டில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினரின் சகோதரரான ரியாஜ் பதியுதீன், கொழும்பு வெள்ளவத்தையில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் தொடர்பில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மேலதிக விசாரணைகளைமுன்னெடுத்துவருகின்றது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளில் கிடைத்த சாட்சிகளின் அடிப்படையிலேயே ரிஷாத் பதியுதீன் மற்றும் அவரது சகோதரர் ஆகியோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மே தின நிகழ்வுகளை அரசு தடுத்து நிறுத்தியமை ஜனநாயக விரோதமாகும். இலங்கையில் கொரோனாவைக் காரணம் காட்டி மே தினம் அன்று எந்த நிகழ்வுகளையும் நடத்தவேண்டாம் என்று இராணுவத்தளபதி ஊடாக ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார். ஜனாதிபதியும் பிரதமரும் ஒன்றை மட்டும் கவனத்தில் கொள்ளவேண்டும். இது மக்கள் ஆணையுடன் அமைக்கப்பட்ட அரசு. எனவே மக்களின் உரிமைகளை வெளிக்காட்டும் நிகழ்வுகளை அடியோடு நிறுத்துவது ஜனநாயக விரோதம்.

சுகாதார விதிகளைக் கடைப்பிடித்துக் கொண்டு நிகழ்வுகளை பெரும் எடுப்பில் அல்லாமல் ஒரு கட்டமைப்புக்குள் நடத்தலாம் என்று அரசு அறிவித்திருக்கலாம். ஆனால், அரசுக்குள் இருக்கும் முக்கிய இரு தலைவர்களையும் (ஜனாதிபதி, பிரதமர்) இயக்குகின்ற ஒரு முக்கிய புள்ளிதான் இந்த நிகழ்வுகளை நிறுத்துவதற்கு மூல காரணமாக அமைந்துள்ளார்.

அரசுக்குள் இன்று எழுந்துள்ள முரண்பாடுகளுக்கு அந்த முக்கிய புள்ளிதான் காரணம். பங்காளிக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தை நாம் புறக்கணித்ததில் நியாயம் உண்டு. இந்த நிலையில் மே தின நிகழ்வுகளை நாம் எவ்வாறு நடத்துவது என்று ஆலோசித்துக் கொண்டிருந்த நிலையில் அந்த நிகழ்வுகள் அனைத்தையும் நடத்துவதற்கு அரசு தடை விதித்துள்ளது. அரசுக்குள் இருக்கின்ற வேற்றுமைகளை ஜனாதிபதியும், பிரதமரும் உடன் களையவேண்டும். இல்லையேல் அரசை எவராலும் காப்பாற்ற முடியாது - என்றார்.

திரிபடைந்த வீரிய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொவிட் பரவல் தொடர்பான விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் இந்தியாவில் சிறந்த நிலைமை காணப்பட்டது. நாளொன்றுக்கு சுமார் 11,000 தொற்றாளர்கள் மாத்திரமே இனங்காணப்பட்டனர். அந்நாட்டுசனத்தொகையுடன் ஒப்பிடும் போது அது மிகக் குறைவான எண்ணிக்கையாகும். எனினும் கிரிக்கெட் விளையாட்டு போட்டி, தேர்தல் பிரசாரங்கள் என்பவற்றால் அங்கு மீண்டும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

இதேபோல இலங்கையிலும் புத்தாண்டு கொண்டாட்டத்தின் பின்னர் துரதிஷ்டவசமாக உருமாறிய புதிய வைரஸுடன் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இந்த புதிய வைரஸ் முன்னர் காணப்பட்ட வைரஸின் தன்மையிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும்.

முன்னர் காணப்பட்ட வைரஸ் ஒருவரிடமிருந்து ஏனைய ஒருவர் அல்லது இருவருக்கு மாத்திரமே பரவக் கூடியதாக காணப்பட்டது. ஆனால் தற்போதுள்ள வைரஸ் ஒருவரிடமிருந்து 5 - 6 பேருக்கு பரவக் கூடியதாகும். அத்தோடு இந்த வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளவர்களில் 90 சதவீதமானோருக்கு 14 நாள்களுக்கு எவ்வித தொற்று அறிகுறிகளும் தென்படாது.

மேலும் தற்போது இளைஞர்களும் அதிகளவாக தொற்றுக்கு உள்ளாகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இந்தியாவில் கணிசமானளவு இளைஞர்கள் இதனால் உயிரிழந்துள்ளனர். மேலும் இந்த வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்கள் முகக்கவசம் அணியாமல் இருப்பாராயின் அவர் இருக்குமிடத்தில் சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் வைரஸ் உயிருடன் இருக்கும்.

எனவேதொற்றுக்குஉள்ளானவர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து வெளியேறினாலும் அவரிடமுள்ள வைரஸ் அங்கு காணப்படும். இதனால் ஏனையோரும் பாதிக்கப்படும் வாய்ப்பு அதிகமுள்ளது. எனவே சரியான முறையில் முகக்கவசம் அணிவது கட்டாயமாகும் என்றார்.

இலங்கையில் அரசியல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்டவாறு கூறிய அவர், மேலும் தெரிவித்ததாவது:-

நமது அரசின் தலைவர்கள் தம் உதட்டளவில் பேசும் பௌத்த தர்மம், தேசாபிமானம் என்பன தம் உள்ளத்திலிருந்து வெளிவராததன் காரணமாகவே இந்த நாட்டின் உயரிய சபையில் இன்று அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விவாதம் நடைபெறுகின்றது. இதனையிட்டு புத்தரின் போதனைகளை மதிக்கும் ஒருவன் என்ற ரீதியில் வெட்கப்படுவதா, வேதனைப்படுவதா அல்லது கௌதம புத்தரைப் போன்று எனது மனைவி, பிள்ளைகளை விட்டுத் துறவறம் போவதா என்ற சிந்தனைகள் எனது மனதைக் குழப்புகின்றன.

ஆட்சி மாறும்போது அமைச்சர்கள் மாற்றம் பெறுவார்கள். அமைச்சின் செயலாளர்கள் மாற்றம் பெறுவார்கள். அத்தனை அரச இயந்திரங்களும் அரசுக்குச் சாதகமாக மாறும்.

கடந்த ஆட்சியில் உயர் பதவிகளில் இருந்தவர்கள் பந்தாடப்படுவார்கள். இது நமது நாட்டில் ஆட்சி மாறும் போது இடம் பெறும் சாதாரண காட்சி.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்கவின்பதவிநீக்கம்அரசமைப்புக்கு முரணல்ல என்று இன்று வாதிடும் நீதி அமைச்சர் அலிசப்ரி பிரதம நீதியரசர் மோகன் பீரிஸை நீக்கியமை அரசமைப்புக்கு முரண் எனக் கூறுவது அரசியல் பழிவாங்கல்களின் ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதற்கு ஒப்பானது.

தமது இனத்துக்குள்ளே, தமது மதத்துக்குள்ளே மாறி மாறி ஆட்சியமைக்கும் அரசியல் தலைவர்களினால் அரசியல் பழிவாங்கல்கள் ஏற்படுகின்றன என்றால் அர்த்தபுஷ்டியுள்ள அதிகாரப்பகிர்வுக்காகவும் புறக்கணிப்புக்கு எதிராகவும் சமத்துவத்துக்காகவும் போராடும் எமது மக்கள் எத்தனை விதத்தில் பழிவாங்கப்பட்டிருப்பார்கள். இத்தகைய பழிவாங்கல்களுக்காக நியாயம் கேட்க முடியாத நாதியற்ற சமூகமாக எமது மக்கள் எவ்வளவு காலம் வாழ்ந்திருப்பார்கள்? தேசிய சுதந்திரப் போராட்டத்திலிருந்து தேசியத்துக்காக உழைத்த எமது தலைவர்கள் இன்று உரிய தேசிய மரியாதையின்றி புறக்கணிக்கப்படுகின்றார்கள். ஆனால், எமது இனத்தின் பேரில் அரசுக்கு ஆதரவு வழங்கும் ஒரு சில அரசியல்வாதிகளுக்குஎலும்புத்துண்டுக்கும்குறைவான மரியாதையை மக்கள் வழங்குகின்றார்கள் என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்

ஆட்சியாளர்களுக்குச் சார்பாக அரச சட்டங்கள் வளைந்து கொடுக்கின்றன. கிரிஷாந்தி குமாரசாமி வழக்கில் நீதிமன்றத்தின் மூலம் சந்தேகத்துக்கிடமின்றி குற்றம்நிரூபிக்கப்பட்டுமரணதண்டனை வழங்கப்பட்ட மரணதண்டனைக் கைதி ஒருவர் சிங்கள இராணுவச் சிப்பாய் என்பதால் அவர் அரசின் பொதுமன்னிப்புக்கு ஆளாகின்றார். இப்படிஎத்தனையோ இராணுவத்தினர் நீதிமன்றங்கள் வழங்கிய தண்டனைத் தீர்ப்பிலிருந்து பொதுமன்னிப்புப் பெற்றுள்ளனர். ஆனால், தாயை இழந்து தனியாக உறவினருடன் வாழும் தன் மகளினதும் மகனினதும் வாழ்வைக் காப்பாற்றுவதற்காக ஆனந்த சுதாகரனுக்கு பொதுமன்னிப்பு வழங்குங்கள் என்று முழந்தாளில் நிற்காத குறையாக அகிலமே வேண்டியும் கூட ஆட்சியாளரின் அகிம்ஷைக் கண் திறக்கவில்லை.

26 வருடங்களுக்கும் மேலாக வழக்குத் தாக்கலின்றி வெறும் சந்தேகத்தின் அடிப்படையில் எத்தனை அரசியல் கைதிகள் சிறைகளில் வாடுகின்றனர். இவர்கள் செய்த குற்றம் என்ன? தன் இனத்தைதன் மொழியைதன்மண்ணை நேசித்ததா குற்றம்? இதுபோன்ற அரசியல் பழிவாங்கல் இராணுவ ஆட்சி நடக்கும் நாட்டில் கூட நடந்ததாக அண்மைய வரலாற்றுப் பதிவுகள் இல்லை. ஆனால், உலகுக்கு ஜனநாயகத்தைப் போதித்த நாடாளுமன்ற சம்பிரதாயங்களின் தாய் எனப் போற்றப்படும் பிரிட்டனுக்கு முன்னரே சர்வஜன வாக்குரிமையை வழங்கியதாக பெருமை கொண்ட எமது நாட்டில் இத்தகைய பழிவாங்கல்கள் என்று ஓயும்? இவை ஓயுமா அல்லது அடுத்த தலைமுறைக்கும் நகர்த்தப்படுமா?

அரச பதவி நியமனங்களில் தமிழர்கள் முற்றாகப் புறக்கணிக்கப்படுகின்றார்கள். அண்மைய இலங்கை நிர்வாக சேவை பரீட்சை முடிவு இதற்குச் சான்றாகும். மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையிலே கடந்த முறை 69 பேர் அழைக்கப்பட்டிருந்தும் அவர்களில் ஒருவர் கூட தமிழர் இல்லை. இது ஒரு திட்டமிட்ட பழிவாங்கல். பதவிகளை வழங்கும்போது தகுதிக்கும் திறமைக்கும் முன்னுரிமையளியுங்கள். இனத்துக்கும் உறவுக்கும் முன்னுரிமை வழங்காதீர்கள்.

எமது நாடு முன்னைய சிறப்பை அடைய வேண்டுமானால் ஆட்சியாளர்கள் கடந்த கால வரலாறிலிருந்து பாடம் கற்கவேண்டும். அதிலிருந்துஉங்களின் தவறுகளைக் கண்டுபிடியுங்கள். அவற்றுக்குச் சிறந்த தீர்வை வழங்குங்கள். வரலாற்றிலிருந்து பாடம் கற்காத எவரும் மக்கள் போற்றும் அரசு தலைவராக மிளிர முடியாது. இதனை உணர்ந்து உங்கள் தீர்மானங்களை எடுங்கள். இந்த நாட்டில் தமிழர்கள் எப்படி வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்பது அரசியல் பழிவாங்கலுக்குச் சிறந்த உதாரணம் என்றார்.

கிளிநொச்சி ஆனந் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்கள ஊழியர்களால் சிறுத்தை பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டது.

இந்தச் சம்பவம் இன்று காலை இடம் பெற்றது. கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட ஆனந்தபுரம் கிழக்கு பகுதியில் நாகராஜா செந்தில்குமரன் என்பவரதுகுடியிருப்புக்குள்ளேயே இவ்வாறு சிறுத்தை நுழைந்துள்ளது. அவரின் வீட்டு வளர்ப்பு நாய் வழமைக்கு மாறாக எச்சரிக்கை ஒலி எழுப்பியதால் அவர் சுற்றுச் சூழலை பார்வையிட்டுள்ளார்.

நாய் குரைக்கும் திசையில் சிறுத்தை அச்சத்தின் மத்தியில் மரத்தின் மீது ஏறி இருப்பதை அவதானித்த அவர் அது தொடர்பில் படையினருக்கு தகவல் வழங்கியுள்ளார். இதனை அடுத்து அப் பகுதிக்குச் சென்ற படையினர் சிறுத்தையை அவதானித்தமையுடன், சம்பவம்தொடர்பில்வனஜீவராசிகள்திணைக்களத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

இதனை அடுத்து அங்கு வருகை தந்த வன ஜீவராசி திணைக்களத்தினர் அந்தச் சிறுத்தையைப் பாதுகாப்பாக வெளியேற்ற நடவடிக்கை மேற்கொண்டனர். நீண்ட முயற்சியின் பின்னர் சிறுத்தை வெளியேறியது.

நகரை அண்மித்த அப்பகுதிக்குள் சிறுத்தை பிரவேசித்தமை தொடர்பில் மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். கனகாம்பிகைக்குள கழிவாற்று பகுதியின் ஊடாக குறித்த சிறுத்தை கிராமத்திற்குள் நுழைந்துள்ளது எனக் கருதப்படுகிறது.

இந்தச் சிறுத்தையினால் மனிதர்களிற்கு நேரடியான பாதிப்பு ஏற்படாது எனவன ஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. எனினும் கால்நடைகள், சிறுவர்கள் உள்ள பகுதியில் இவ்வாறு சிறுத்தை நுழைந்தமை தொடர்பில் அப் பிரதேசத்தில் மக்கள் மத்தியில் அச்சம் காணப்படுகின்றது.

இதேவேளை கடந்த சில வருடங்களிற்கு முன்னர் கனகாம்பிகைக் குளம் பகுதியில் வீட்டு கிணற்றில் விழுந்திருந்த சிறுத்தை இவ்வாறு வன ஜீவராசிகள் திணைக்களத்தினால் மீட்கப்பட்டு பொருத்தமான பகுதியில் விடப்பட்டிருந்தது.

அத்துடன் அம்பாள்குளம் பகுதியில் மக்கள் குடியிருப்புக்குள் நுழைந்த சிறுத்தையொன்று துன்புறுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவமும் நிகழ்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

கொரோனாக் குழப்பம்

"புதுத் தும்புக் கட்டை நன்றாகக் கூட்டும்' என்பார்கள்.

கோட்டாபய ராஜபக்ஷவின் அரசும் கூட அப்படித்தான். ஆட்சிக்கு – அதிகாரத்துக்கு – வந்ததும் அது கூட அப்படித்தான் நடந்து கொண்டது.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியில் அமர்ந்து தனது அதிகாரப் பிடியை நிலைநிறுத்திக் கொள்ளவும், கொரோனாப் பேரரக்கன் இலங்கையில் கால் ஊன்றவும் சரியாக இருந்தது.

ஆரம்பத்தில் தனது கெடுபிடி நடவடிக்கைகள் மூலம், கொரோனாத் தொற்றைப் பரவ விடாது கட்டுப்படுத்தியமை போன்ற ஒரு தோற்றத்தை கோட்டா ஆட்சிப் பீடத்தினால் காட்ட முடிந்தது.

கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்த கோட்டா அரசு ஆரம்பத்தில் எடுத்த முன்முயற்சியை மக்களும் கூடத் தொடக்கத்தில் மெச்சிப் பேசி, சிலாகித்துப் பாராட்டத் தவறவில்லை. ஆனால் எல்லாம் புதுத் தும்புக் கட்டை நன்றாகக் கூட்டும் என்ற கதை மாதிரித்தான். போகப் போக நிலைமை 'பழைய குருடி' கதையாக மாறி விட்டது.

பரவல் தீவிரமடையத் தொடங்கிய காலகட்டத்தில் இருந்து பொது மக்களுக்கு உபதேசம் செய்யும் பணி ஒன்றைத்தான் கோட்டா அரசு செய்து வருகின்றதே தவிர, பிற பாதுகாப்பு, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை உரிய காலத்தில் –உரிய சந்தர்ப்பத்தில் – முன்னெடுப்பதில் தவறிழைத்து அல்லது மந்தமாகச் செயற்பட்டு – கோட்டை விட்டு வருகின்றது அது.

ஆரம்பத்தில் பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கையைத் தீவிரப்படுத்தி, அதன் மூலம் தொற்றாளர்களை விரைந்து அடையாளம் கண்டு, சமூகத்திலிருந்து பிரித்து, தனித்துவப்படுத்தி,அதன் மூலம் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டபோது, பி.சி.ஆர். சோதனை நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவதில் பெரும் மெத்தனமும் தாமதமும் காட்டப்பட்டது.

இப்போது, குறிப்பிடத்தக்க அளவுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டு, அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும் தொற்றுப் பரவல் நிலைமை கட்டு மீறிப் போகும் சூழல். இக்கட்டு. நெருக்கடி.

இன்றைய நிலையில் ஒருபுறம் தொற்றுப் பரவலைத் தடுக்கும் விதத்தில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் அதே சமயம், மறுபுறத்தில் இரண்டு பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

ஆனால் அவற்றில் கோட்டா அரச நிர்வாகம் சிரத்தையாக – அதீத கவனத்துடன் – இருப்பதாகத் தெரியவில்லை.

ஒன்று – தொற்றுப் பரவலால் அதிகம் பாதிக்கப்படும் கொரோனா நோயாளர்களை பராமரிப்பதற்கான வைத்திய – மருத்துவ – வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளல்.

தொற்றுக்குள்ளாகும் அனைவரையும் தனிமைப்படுத்தி, அவர்கள் அனைவரையும் வைத்திய சேவைக்கு உட்படுத்த வேண்டும் என்றாலும், அவர்கள் அனைவருக்குமே தீவிர மருத்துவ கண்காணிப்பு வழங்க வேண்டும் என்பதல்ல.

கணிசமான எண்ணிக்கையானோர் – பெரும்பாலும் இள வயதினர், திடகாத்திரமாக உள்ளோர் – உடல் ரீதியாகத் தாங்களே இந்தத் தொற்றை எதிர்கொள்ளும் இயைபாக்கத்தைப் பெற்று, சொற்ப மருத்துவ உதவியுடன் தேறி விடுவர்.

மிக மோசமாகப் பாதிக்கப்படக் கூடியோருக்கு 'வெண்டிலேட்டர்' வசதி வரை வழங்கப்பட வேண்டியிருக்கும். இத்தகைய பாதிப்புக்கு உள்ளாவோருக்கு உரிய மருத்துவ சிகிச்சையை நாடு முழுவதிலும் பரந்து வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். ஆனால் அதற்கான தயார் நிலைக்கு எட்டக் கூடிய கட்டத்தில் இலங்கையின் சுகாதார, மருத்துவ சேவை வசதிகள் இல்லை என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

இவ்வாறு மோசமாகப் பாதிக்கப்படுவோருக்கு மருத்துவ சிகிச்சை அளித்துப் பராமரிப்பதற்கான வசதிகள் இல்லை என்று கைகழுவி விடும் நிலைமையை நோக்கி நாட்டின் மருத்துவ சேவை சென்று கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

அடுத்தது – தொற்று விவகாரத்தைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்கு தடுப்பூசி செலுத்தலாகும்.

உலக நாடுகள் பலவும் தடுப்பூசி செலுத்தும் விடயத்தில் மும்முரமாகச் செயற்பட, இலங்கை மட்டும் ஆரம்பத்தில் ஆரவாரங்கள், கிலுகிலுப்புகள் காட்டி விட்டு, இப்போது அடங்கிப் போய் நிற்கின்றது. இது விடயத்தில் சுகாதார, மருத்துவ உயரதிகாரிகள் கூட பம்மிக் கொண்டு நிற்கின்றமை கண்கூடு.

முதல் டோஸ் தடுப்பூசி போட்டவர்களுக்கே இரண்டாவது 'டோஸ்' தடுப்பூசி கொடுக்க முடியாமல் கோட்டை விடும் அவலத்தில் நிற்கும் கொழும்பு அரசினால், புதிதாகத் தடுப்பூசிகளைப் பெறுவதோ, அதை மக்களுக்கு வழங்குவதோ இயலாத காரியமாக இருக்கின்றது.

கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் விடயத்தில் நாட்டின் மிக முக்கியமான – முதலாவது அம்சம் – தடுப்பூசி போட்டு தன் குடிமக்களுக்கு அத்தொற்று ஏற்படாமல் பாதுகாப்பதாகும். அதை விட்டு விட்டு மற்றெல்லாம் பேசுகின்றது கோட்டா அரசு.

வழமை போல தும்பை விட்டு வாலைப் பிடிக்கின்றது ராஜபக்ஷக்களின் ஆட்சிப் பீடம்.

திரிபடைந்த கொரோனா வைரஸ் சுனாமியாகத் தாக்கும் பேராபத்து!

நிலையைப் புரிந்து தேசிய பொறுப்பாகக் கருதி செயற்படுமாறு கையெடுத்துக் கும்பிட்டுக் கோருகின்றார் சுகாதார அமைச்சர்

கொழும்பு,ஏப்ரல்24

எதிர்வரும் வார இறுதியில் நீண்ட விடுமுறை இடம்பெறவுள்ளது. இதன் காரணமாக அனர்த்த நிலையை புரிந்துகொண்டு தேசிய பொறுப்பாகக் கருதி செயற்படுமாறு சுகாதார அமைச்சு பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

கொவிட் 19 தொற்று பரவலை கட்டுப்படுத்துவதற்காக நேற்று அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட சுகாதார அமைச்சர் பவித்ராவன்னியாராச்சி இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்வரும் தினங்களில் மத வைபவங்கள் இடம்பெறவுள்ளன. புத்தாண்டு வைபவங்களையும் நடத்துவதற்கு சிலர் திட்டமிட்டுள்ளனர். இந்தத் தீர்மானமிக்க சந்தர்ப்பத்தில் இந்த அனைத்தையும் நிறுத்துமாறு கேட்டுக்கொள்கிறார் என அமைச்சர் தெரிவித்தார்.

தற்பொழுது நாட்டில் காணப்படும் கொவிட் 19 வைரஸ் புதிய திரிபு ஆகும். இது முன்னைய வைரஸிலும் பார்க்க மாற்றத்தைக் கொண்டதாகும். சுனாமியைப் போன்று வேகமாக தற்பொழுது இந்தியா போன்ற நாடுகளில் பரவி வருகின்றது. இது எந்த வகை வைரஸ் தொற்று என்று ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த வைரஸ் தொற்றினால் பாதிக்கப்படுவோருக்கு 14 நாள்களுக்கு பிறகே நோய் அறிகுறிகள் காணப்படுகின்றன.

முதலாவது, இரண்டாவது வைரஸ் தொற்று அலையின் போது நாட்டு மக்கள் அதனைப் பொறுப்புடன் செயற்பட்டு அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கினர். இதேபோன்று தற்போது நெருக்கடியான தொற்றுக்கு மத்தியில் பொதுமக்கள் தமது பொறுப்பை உரிய வகையில் நிறைவேற்றி அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தாம் கரம்கூப்பி மக்களிடம் கேட்டுக் கொள்கிறேன் எனச் சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

பசுவை மின் கம்பியில் சிக்க வைத்து கொன்றவர் பின்பு குத்திப் படுகொலை

மின் கம்பியில் சிக்க வைத்து பசுவைக் கொன்றவர் என்ற சந்தேகத்தின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஒருவர் பிணையில் வீடு திரும்பியிருந்த போது கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்யப் பட்டுள்ளார்.

ஊரகஸ்மங்கஸ் சந்தி, கலுவலகொட பகுதியில் நேற்று முன்தினம் இரவு கத்தியால் குத்தப்பட்ட நிலையில் எல்பிட் டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நபர் நேற்று (23) உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

62 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பலியானவர் பசுவின் உரிமையாளரின் மகனால் குத்தப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர் அப்பகுதியிலிருந்து தப்பிச் சென்றுள்ளார் எனவும் கூறப்படுகிறது.

ஒரு தேசமாக ஒன்றுபடுங்கள்! தேரர்கள் கூட்டாக கோரிக்கை

நாடு ஒரே இடத்தில் ஸ்தம்பித்து நின்றுவிடாது பொருளாதார ரீதியாக முன்னேற வேண்டும் என மகாசங்கத்தினர் தெரிவித்துள் ளனர்.

பௌத்த ஆலோசனைச் சபை கூட்டம் நேற்றுப் பிற்பகல் 10ஆவது தடவையாக ஜனாதிபதி அலுவலகத்தில் கூடியபோது கொழும்பு துறைமுக நகரத் திட்டம் தொடர்பாக தெளிவுபடுத்தப் பட்டதன் பின்னர் தேரர்கள் இவ்வாறு குறிப் பிட்டனர் என ஜனாதிபதி செயலக செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்தது.

இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரல் இத்திட்டம் தொடர்பாக விரிவாக தெளிவு படுத்தியமையுடன் பொருளாதாரத்திற்கும் நாட்டுக்கும் கிடைக்கும் பயன்கள் பற்றியும் கருத்து தெரிவித்தார்.

நில அளவினை விரிவுபடுத்தி புதிய முதலீடு களுக்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்துதல் ஒரு நாடு என்ற வகையில் பெற்றுக்கொள்ளும் பாரிய வெற்றியாகும்.

தவறான கருத்துக்களைப் பரப்பி அனைத் தையும் எதிர்ப்பதற்கு பதிலாக ஒரு தேசமாக முன்னேறுவதற்கு அனைவரும் ஒன்றுபட வேண்டும். இந்த அபிவிருத்தித்திட்டம் தொடர் பாக மக்களுக்கு சரியான தெளிவை வழங்கி, அதற்கான ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள வேண்டுமென்று தேரர்கள் சுட்டிக்காட்டினர்.

இதன்போது, கொவிட் 19 புதிய உருமாற்றம், சுகாதார துறையின் ஆலோசனைகள் தொடர்பாக ஜனாதிபதி மகாசங்கத்தினருக்கு தெளிவுபடுத்தினார். பௌத்த ஆலோசனைச் சபையின் உறுப்பினர்களான மகாசங்கத் தினர், இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரம நாயக்க மற்றும் அரச அதிகாரிகள் எனப்பலர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

உயர் பட்டப் படிப்பு பீடத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்வம் கண்ணதாசன் பல்கலைக்கழகப் பேரவையினால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் பதில் துணைவேந்தர் பேராசிரியர் பி. ரவிராஜன் தலைமையில் இடம்பெற்றது. இந்தப் பேரவைக் கூட்டத்தில் இடம்பெற்ற உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி தெரிவில் பேராசிரியர் செல்வம் கண்ணதாசன் முன்னிலை பெற்றுத் தெரிவாகியுள்ளார்.

இது வரை காலமும் உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதியாக விளங்கிய பேராசிரியர் கு. மிகுந்தனின் பதவிக் காலம் கடந்த பெப்ரவரி மாதம் நிறைவடைந்தது. அதன் பின் உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டு, ஒருவர் மட்டும் விண்ணப்பித்திருந்த நிலையில் மீள் விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. இதற்கமைய பேராசிரியர்களான கண்ணதாசன், சுபதினி ரமேஷ் மற்றும் இணைப் பேராசிரியர் கே.அருந்தவராசா ஆகியோர் உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி பதவிக்கு விண்ணப்பித்திருந்தனர்.

மூவரும் இன்று பேரவை உறுப்பினர்கள் முன்னிலையில் தமது எதிர்கால நோக்கு, செயற்றிட்டங்கள் பற்றி விளக்கமளித்தனர். அதை தொடர்ந்து, தெரிவு இடம்பெற்றது. தெரிவின் நிறைவில் 26 வாக்குகளுடன் பேராசிரியர் செல்வம் கண்ணதாசன் முன்னிலை பெற்றுத் தெரிவு செய்யப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநில முதல்வர்கள் ஆலோசனைக் கூட்டம் தொலைக்காட்சிகளில் நேரடியாக ஒளிபரப்பு

பிரதமர் கண்டனம்; கெஜ்ரிவால் மன்னிப்பு கோரினார்

நாட்டில் நிலவி வரும் கொரோனா பரவல் நிலைவரம், தடுப்பூசி செலுத்தும் பணிகள், படுக்கை வசதிகள், ஒக்சிஜன் வசதியை ஏற்படுத்தல் உள்ளிட்ட கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து மாநில முதலமைச்சர்களுடன் பிரதமர் மோடி நேற்று அவரச ஆலோசனைக் கூட்டமொன்றை நடத்தியிருந்தார்.

நாட்டில் கொரோனாத் தொற்று மிக அதிகமாக உள்ள மகாராஷ்டிரா, உத்தரப் பிரதேசம், மத்திய பிரதேசம், சத்தீஷ்கர், தமிழகம், கேரளா, கர்நாடகம், டெல்லி உள்ளிட்ட 11 மாநில முதலமைச்சர்கள் மற்றும் தலைமைச் செயலாளர்களுடன் பிரதமர் மோடி காணொலி மூலம் ஆலோசனை மேற்கொண்டார்.

கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய டெல்லி முதல் மந்திரி அரவிந்த் கெஜ்ரிவால் கொரோனாத் தொற்றுநோயின் இரண்டாவது அலைகளின் போது மருத்துவமனைகளில் ஒக்சிஜன் பற்றாக்குறை காரணமாக 'பாரிய அனர்த்தம்' ஏற்படக் கூடும் என்று எச்சரிக்கை விடுத்தார். அனைத்து ஒக்சிஜன் ஆலைகளையும்

இராணுவம் மூலம் கையகப்படுத்த வேண்டும் என்றும் டெல்லிக்கு வரும் ஒக்சிஜன் தாங்கிகளின் சீரான இயக்கத்தை உறுதி செய்ய அனைத்து மாநிலங்களின் முதலமைச்சர்களையும் வழிநடத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

வழக்கமாக பிரதமர் நடத்தும் ஆலோசனைக் கூட்டங்களின் உரைகள் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாவது இல்லை. இதை மீறி டெல்லி முதல்வர் கெஜ்ரிவால் அரசு, அவரது பேச்சை மட்டும் தொலைக்காட்சிகளில் முதன்முறையாக வெளியிட்டிருந்தது. அதுவும், அந்த ஆலோசனைக் கூட்டம் முடியும் முன்பாகவே காணொலி வெளியாகி, மிகவும் பரபரப்பை ஏற்படுத்தியது.

கூட்டத்தின் இடையில் இந்த விவகாரம் தனது கவனத்திற்கு வந்ததையடுத்து பிரதமர் மோடி முதல்வர் கெஜ்ரிவாலுக்கு சில அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தார். 'நமது மரபு மற்றும் பாரம்பரிய வழக்கத்தின்படி இது போன்ற ஆலோசனைக் கூட்டங்களைத் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்புவது கிடையாது. ஆனால், இன்று அவை மீறப்பட்டுள்ளன. ஒரு மாநில முதல்வர் இதைத் தொலைக்காட்சிகளில் நேரடி ஒளிபரப்பு செய்கிறார். இது எந்த வகையிலும் முறையானது அல்ல. இந்த விவகாரத்தில் என்றும் விதிமுறைகளை கடைப்பிடிப்பது அவசியம்" என அவர் குறிப்பிட்டார்.

இதில், கெஜ்ரிவாலின் பெயரைக் குறிப்பிடாமல் நடந்த விடயத்தை மட்டும் பிரதமர் மோடி சுட்டிக் காட்டினார் எனக் கூறப்படுகிறது. எனினும், பிரதமர் குறிப்பிடுவது தன்னைத்தான் என புரிந்து கொண்ட முதல்வர் கெஜ்ரிவால், உடனடியாக பதிலளித்தார் என உள்ளக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

'நீங்கள் கூறியதை இனி நினைவில் கொள்வோம். கொரோனாவால் பலியான ஆன்மாக்கள் சாந்தி அடைய வேண்டும். அவர்களது குடும்பத்தாருக்கு நம்பிக்கை கிடைக்க வேண்டும். எனது சார்பில் எதுவும் தவறுகள் நிகழ்ந்திருந்தால் அதற்காக நான் மன்னிப்பு கோருகிறேன். இன்றைய கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட கருத்துகள் மிகவும் சிறப்பாக இருந்தன. இதன் அடிப்படையில் எங்களுக்கு அளித்த உத்தரவுகளை நாங்கள் பின்பற்றுவோம்' என்று கெஜ்ரிவால் உறுதியளித்தார் என தெரிவிக்கப்படுகிறது. இதையடுத்து, மத்திய அரசின் சார்பில் வெளியான அறிக்கையிலும் இந்த விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

மெரினா கடற்கரையில் 'ஸ்மார்ட்' கடைகளுக்கு எதிர்ப்பு

வியாபாரிகள் சாலை மறியல் போராட்டம்

சென்னை மெரினா கடற்கரையில் நடத்தப்படும் கடைகளை முறைப்படுத்தும் விதமாக அதன் பரப்பு மற்றும் கொள்திறன் அடிப்படையில் 900 கடைகளை மட்டும் அனுமதிக்க மாநகராட்சி முடிவு செய்தது. அங்கு மாநகராட்சியால் வழங்கப்படும் 'ஸ்மார்ட்' வண்டி கடைகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் ஏற்கனவே அங்கு கடைகளை வைத்திருந்த, மாநகராட்சியால் தேர்வு செய்யப்பட்ட கடைக்காரர்களுக்கு 60 சதவீதம், அதாவது 540 கடைகளும், மெரினாவில் கடை நடத்தாத வெளியாள்களுக்கு 40 சதவீதம் அதாவது, 360 கடைகளும் ஒதுக்கப்பட்டன.

அதற்காக 14 ஆயிரத்து 322 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அதில் இருந்து 900 பயனாளிகள் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு கடைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டது. குலுக்கல் நடைபெற்ற போதே மெரினாவில் ஏற்கனவே கடை வைத்து வியாபாரம் செய்தவர்களுக்கே கடை ஒதுக்கக் கோரியும் குலுக்கல் முறையில் வெளியாட்களுக்கு கடை ஒதுக்குவதை கண்டித்தும் மெரினா கடற்கரையில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இதை எதிர்த்து நீதிமன்றத்திலும் வழக்குகள் தொடரப்பட்டன.

இந்தநிலையில் 'ஸ்மார்ட்' சிட்டி திட்டத்தின் கீழ் கடைகள் அமைப்பதற்காக மாநகராட்சி சார்பில் நேற்று காலை 8 மணியளவில், முதல் கட்டமாக 50 இற்கும் மேற்பட்ட கடைகளை மெரினா கடற்கரையில் இறக்கி, மாநகராட்சி ஊழியர்கள் வரிசைப்படுத்தியபோது, ஏற்கனவே கடை வைத்திருந்த 50 இற்கும் மேற்பட்டோர் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து திடீரென அந்தப் பகுதியில் சாலையில் அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு வந்த மெரினா பொலிஸார், சாலை மறியலில் ஈடுபட்ட வியாபாரிகளுடன் பேச் நடத்தினர். அப்போது, மாநகராட்சி சார்பில் இங்கு இறக்கப்பட்ட கடைகளை உடனே அப்புறப்படுத்த வேண்டும் என்றும், இல்லையென்றால் அதுவரை போராட்டம் நடத்தப்படும் என்றும் கூறி அவர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். மெரினா காவல் நிலையத்தையும் அவர்கள் முற்றுகையிட்டனர். இதையடுத்து பொலிஸார் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட அனைவரையும் கைது செய்து மயிலாப்பூர் பகுதியில் உள்ள தனியார் மண்டபத்தில் அடைத்து வைத்தனர். பின்னர் மாலையில் அவர்களை விடுவித்தனர். இந்த சம்பவத்தால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

தூத்துக்குடி துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் என்னிடம் ஆதாரம் இல்லை – ரஜினி

தூத்துக்குடி துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பாக ஓய்வுபெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையிலான ஒரு நபர் ஆணையம் விசாரணை நடத்தி வருகிறது. 27 ஆம் கட்ட விசாரணை தற்போது நடந்து வரும் நிலையில் ஒரு நபர் ஆணையத்தின் வழக்கறிஞர் அருள் வடிவேல் சேகர் நேற்று ஊடகங்களுக்குப் பேட்டியளித்தார்.

அப்போது அவர், 'தூத்துக்குடி துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பாக இதுவரையில் 1,052 பேருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. 712 பேர் சாட்சியம் அளித்துள்ளனர். இந்த 27 ஆம் கட்ட விசாரணையில் மட்டும் 48 பேர் சாட்சியம் அளித்துள்ளனர். 1,126 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அடுத்தகட்ட விசாரணை அடுத்த மாதம் 17 ஆம் திகதி தொடங்கி 5 நாள்கள் நடைபெறவுள்ளது. விரைவாக விசாரித்து விசாரணை அறிக்கையை அரசிடம் விரைவில் ஒப்படைக்க இருக்கிறோம்' என்று தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசிய போது, 'இந்த வழக்கு சி.பி.ஐக்கு மாற்றப்பட்ட நிலையில் சி.பி.ஐ. மூன்று கட்ட குற்றப்பத்திரிகைகளை சமர்ப்பித்துள்ளன. இதில் முதற்கட்டமாக 27 பேர் மீதும், 2 ஆவது கட்டமாக 44 பேர் மீதும், 3 ஆவது கட்டமாக காவல்துறை இன்ஸ்பெக்டர் திருமலை என்பவர் மீது மட்டும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளனர்.

சட்டவிரோதமாக கூடுதல், பொதுச் சொத்துக்கு சேதம் விளைவித்தல் ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளனர். இதில் சம்பந்தப்பட்ட அனைவரிடமும் விசாரணை நடத்தப்பட்டுள்ளது. இனி காயமடைந்த காவலர்கள், உயர் காவல் அதிகாரிகள், வருவாய்த்துறை அதிகாரிகள் ஆகியோரிடம் மட்டுமே விசாரணை நடத்த வேண்டியுள்ளது' என்றார்.

அப்போது, நடிகர் ரஜினிகாந்த் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தது தொடர்பான விசாரணை பற்றி கேட்கப்பட்டபோது, 'நடிகர் ரஜினிகாந்தும் தன்னிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதில் அளித்துள்ளார். அதில் அவர் அன்று நடந்த பத்திரிகையாளர் சந்திப்பு என்பது தற்செயலாக நடந்தது. திட்டமிட்டு நடந்தது அல்ல. சம்பவத்தன்று ஊர்வலத்தில் சமூக விரோதிகள் புகுந்து விட்டனர் என்று கூறியதற்கான ஆதாரங்கள் எதுவும் என்னிடம் இல்லை என்று ஏற்கனவே தெரிவித்துவிட்டார்.

இருப்பினும் அவரது வயது கருதியும் கொரோனாத் தொற்று பரவுவதன் காரணமாகவும் நிலைமை சுமுகமானதும் மீண்டும் சில சந்தேகங்களுக்காக அவரிடம் விசாரணை நடத்தப்படும். சட்டத்தரணி மூலமாக அவர் எழுதி கையெழுத்திட்டே பதில்களை அனுப்பியுள்ளார். சுமார் 15 கேள்விகள் அவரிடம் கேட்டிருந்தோம். எல்லாவற்றிற்கும் அவர் பதில் அளித்துள்ளார்' என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவில் ஒருநாள் கொரோனா பாதிப்பு மூன்று லட்சத்து 46 ஆயிரத்தை தாண்டியது!

கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் இந்தியாவில் தொடர்ந்து நீடிக்கிறது. இன்று தொடர்ந்து மூன்றாவது நாளாக மூன்று இலட்சத்துக்கும் அதிகமானோருக்கு தொற்று பாதிப்பு பதிவானது. கொரோனா பாதிப்பால் ஒரே நாளில் 2,264 பேர் உயிரிழந்துள்ளன எனவும் தொற்றுப் பாதிப்பில் இருந்து ஒரே நாளில் 2 லட்சத்து 19 ஆயிரத்து 838 பேர் குணம் அடைந்துள்ளன எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியாவில் இதுவரை நாட்டில் ஒரு கோடியே 66 இலட்சத்து 10 ஆயிரத்து 481 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என அடையாளம் காணப்பட்டுள்ளது. தொற்றில் இருந்து குணம் அடைந்தவர்கள் எண்ணிக்கை ஒரு கோடியே 38 லட்சத்து 67 ஆயிரத்து 997 ஆக உயர்ந்துள்ளது. கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை ஒரு லட்சத்து 89 ஆயிரத்து 544 ஆக அதிகரித்துள்ளது.

தொற்றுப் பாதிப்புடன் சிகிச்சை பெறுபவர்கள் எண்ணிக்கை 25 இலட்சத்து 52 ஆயிரத்து 940 ஆக உள்ளது.

தமிழகம் முழுதும் நாளை முழு ஊரடங்கு

மீன் சந்தையில் மக்கள் கூட்டம்

சென்னை காசிமேட்டில் மீன் வாங்க ஏராளமானோர் குவிந்ததால் கொத்தணியாக கொரோனா பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றின் தீவிரத்தை கட்டுப்படுத்த இரவு நேர ஊரடங்கை தமிழக அரசு அமுல்படுத்தியுள்ளது. கொரோனா பரவல் அதிகரித்து உள்ளதால் தமிழகத்தில் நாளை முழு ஊரடங்கும் அமுல்படுத்தப்படுகிறது. எனவே, சென்னையில் மிகப்பெரிய மீன் சந்தையான காசிமேடு துறைமுகத்தில் மீன் வாங்குவதற்காக இன்று அதிகாலை முதலே மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது.

இதைக் கட்டுப்படுத்த காவல்துறையினர் நடவடிக்கைகளை மேற்கொண்டாலும், மீன்

வாங்குவதில் ஆர்வம் காட்டும் பொதுமக்கள் முகக் கவசம் அணியாமலும் சமூக இடைவெளியைப் பின்பற்றாமலும் நடந்துகொண்டனர் எனக் குற்றஞ்சாட்டப்படுகிறது. இதனால் காசிமேடு மீன் சந்தையில் கொத்தணியாக கொரோனாத் தொற்று பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக காவல் மற்றும் சுகாதாரத் துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்பன் உமிழ்வைக் குறைப்பதற்கு நியூசிலாந்தின் வழியைப் பின்பற்ற வேண்டும்

பிரதமர் ஜெசிந்தா ஆர்டன் வலியுறுத்து

'உலக பருவநிலை உச்சி மாநாடு' காணொலிக் காட்சி மூலமாக 2 நாள்கள் நடைபெற்றது. இதில் கலந்து கொள்வதற்காக அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அழைப்பு விடுத்ததன் பேரில் 40 இற்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

இந்த மாநாட்டில் பருவநிலை மாறுபாடு காரணமாக உலக நாடுகள் சந்தித்து வரும் சவால்கள் குறித்து அனைவரும் பேசினர். இந்த உச்சி மாநாட்டில் பேசிய நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா, உலக வெப்பமயமாதலை தடுப்பதற்கு கார்பன் உமிழ்வை குறைக்க நியூசிலாந்தின் வழியை உலக நாடுகள் பின்பற்ற வேண்டும் என அழைப்பு விடுத்தார்.

மேலும் கார்பனை விலை நிர்ணயம் செய்யவும், காலநிலை தொடர்பான நிதி வெளிப்பாடுகளை கட்டாயமாக்கவும், புதைபடிவ எரிபொருள் மானியங்களை முடிவுக்குக் கொண்டுவரவும் உலக நாடுகளின் தலைவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் ஜெசிந்தா ஆர்டென் வலியுறுத்தியுள்ளார்.

ஜோன்சன் அண்ட் ஜோன்சன் தடுப்பூசிக்கு மீண்டும் அமெரிக்காவில் அனுமதி

இரத்த உறைதல் புகாரின் எதிரொலியாக அமெரிக்காவில் நிறுத்தப்பட்ட ஜோன்சன் அண்ட் ஜோன்சன் கொரோனாத் தடுப்பூசியை மீண்டும் பயன்பாட்டிற்கு கொண்டு வரலாம் என்று அந்த நாட்டின் நோய்க் கட்டுப்பாட்டு மற்றும் தடுப்பு அமைப்பு பரிந்துரை செய்துள்ளது.

பைஸர், மாடர்னா, ஜோன்சன் அண்ட் ஜோன்சன் ஆகிய கொரோனாத் தடுப்பூசிகள் அமெரிக்காவின் அனைத்து மாநிலங்களிலும் பயன்பாட்டிற்கு வந்தன. ஆயினும், ஒரு முறை மட்டுமே செலுத்தினால் போதுமானது என்ற தன்மையுடைய ஜோன்சன் அண்ட் ஜோன்சன் நிறுவனத்தின் தடுப்பூசியைச் செலுத்திக் கொண்டவர்களின் சிலருக்கு இரத்த உறைதல் பிரச்சினை கண்டறியப்பட்டது.

இதையடுத்து இரண்டு மாதங்களுக்கு முன்பு ஜோன்சன் அண்ட் ஜோன்சன் நிறுவனத்தின் தடுப்பூசிப் பயன்பாட்டினை நிறுத்தி வைத்த அமெரிக்க அரசு, மருந்தினை மறு ஆய்வுக்கு உட்படுத்த எப்.டி.ஏ., சி.டி.சி.பி. ஆகிய அமைப்புகளுக்கு உத்தரவிட்டது.

ஜோன்சன் அண்ட் ஜோன்சன் தடுப்பூசியால் ஏற்படும் அபாயத்தை விட பலன்கள் அதிகமாக இருக்கின்றது அதனை ஆய்வு செய்த சி.டி.சி.பி. எனப்படும் அமெரிக்க நோய்க் கட்டுப்பாட்டு மற்றும் தடுப்பு முகாமை தெரிவித்துள்ளது. ஜோன்சன் அண்ட் ஜோன்சன் தடுப்பூசியை அமெரிக்காவில் தொடர்ந்து பயன்படுத்தலாம் என்றும் அந்த அமைப்பு பரிந்துரை செய்துள்ளது. இதையடுத்து அந்த நிறுவனத்தின் தடுப்பூசிப் பயன்பாட்டை மீண்டும் தொடங்க அமெரிக்க அரசு விரைவில் அதிகாரப்பூர்வ அறி விப்பை வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரேஸிலில் தீவிரமடையும் கொரோனாத் தொற்று உலகளவில் பாதிப்பு 14.62 கோடியைக் கடந்தது!

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தொற்று பரவி ஓர் ஆண்டு கடந்து விட்டாலும் இதன் வீரியம் குறைந்தபாடில்லை. பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 14.62 கோடியைக் கடந்துள்ளது. கொரோனாப் பாதிப்பில் இருந்து இதுவரை 12.40 கோடிக்கும் அதிகமானோர் குணமடைந்துள்ளனர். ஆயினும், வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 30.98 லட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

வைரஸ் தொற்று ஏற்பட்டவர்களில் 1.87 கோடிக்கும் அதிகமானோர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் ஒரு இலட்சத்து 9 ஆயிரத்துக்கு 900 க்கு மேற்பட்டோரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என தரவுகள் கூறுகின்றன.

கொரோனா பாதிப்பு அதிகமுள்ள நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா, இந்தியா, பிரேஸில், பிரான்ஸ், ரஷ்யா ஆகியவை முதல் 5 இடங்களில் உள்ளன. அமெரிக்காவில் 65,483 பேர் புதிதாக கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் 746 பேர் கொரோனாவுக்கு பலியாகியுள்ளனர். பிரேஸிலில் தொடர்ந்து அதிக உயிரிழப்பு ஏற்பட்டு வருகிறது. அங்கு ஒரே நாளில் 65,971 பேருக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பிரேஸிலில் கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 2,866 பேர் கொரோனாவால் இறந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொரோனா நெருக்கடியில் இந்தியாவுக்கு உதவ சீனா தயார்

இந்தியாவில் கொரோனாத் தொற்று பரவலின் தீவிரம் அதிகரித்த வண்ணம் உள்ளது. இந்த இரண்டாவது அலையின் தீவிரம் நாட்டுக்கே அச்சுறுத்தலாக அமைந்துள்ள நிலையில் கொரோனா வைரஸ் விவகாரத்தில் இந்தியாவின் தேவைக்கு ஏற்ப உதவ தயார் என சீனா தெரிவித்துள்ளது.

கொரோனா உலகத்திற்கே எதிரி. அதனை விரட்டி அடிப்பதில் உலக நாடுகள் அனைத்தும் ஒன்றுபட வேண்டியுள்ளது. அதனால் இந்தியாவின் தேவைக்கு ஏற்ப உதவ சீனா தயார் என அந்நாட்டின் வெளியுறவு அமைச்சக துறை அதிகாரி ஒருவர் பத்திரிகை ஒன்றுக்கு பேட்டி கொடுத்துள்ளார்.

இருப்பினும் அது என்ன வகையிலான உதவி என்பது குறித்து இதுவரை அந்த நாடு உறுதி செய்யவில்லை. அதேபோல, இரு நாடுகளும் அதிகாரப்பூர்வமாக இது குறித்து பேசிக்கொண்டார்களா? என்பதற்கும் தெளிவான விவரங்கள்

சவுதி மாணவர்களுக்கு இராமாயணம், மகாபாரதம்; இளவரசரின் 'வின் 2030' திட்டத்தில் இணைப்பு

'வின் 2030' என்ற திட்டத்தின் கீழ் சவுதி அரேபியாவில் பல்வேறு மாற்றங்களை அந்நாட்டு பட்டத்து இளவரசர் மொஹமட் பின் சல்மான் மேற்கொண்டு வருகிறார். இந்தத் திட்டத்தின் கீழ் புதிய முயற்சியாக, வெவ்வேறு கலாசாரங்களைப் பற்றிய கூடுதல் அறிவை வளர்த்தல், பிற நாடுகளின் வரலாற்றை தெரிதல் என்ற அடிப்படையில் அவை பற்றிய பாடங்களை சவுதி மாணவர்களுக்கு கற்பிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கான முன்னாயத்தப் பணியாக அவை குறித்து ஆய்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் இதன் ஒரு பகுதியாக, மாணவர்களுக்கு இந்தியாவின் இதிகாசங்களான இராமாயணம் மற்றும் மகாபாரதம் இரண்டும் கற்பிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு, யோகா மற்றும் ஆயுர்வேதம் குறித்தும் இந்த ஆய்வில் கவனம் செலுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 'வின் 2030' இல் ஆங்கில மொழிக் கற்கையும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

'வின் 2030' என்ற பெயரில் சவுதி சமூகத்தை நவீனமாக்கும் வகையில் அந்நாட்டு அரசு ஏராளமான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. சவுதியின் பட்டத்து இளவரசர் மொஹமட் பின் சல்மான் ஏற்பாட்டில் இந்த சீர்திருத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதுவரை அந்த நாட்டில் பெண்களுக்கு விதிக்கப்பட்ட அதீதக் கட்டுப்பாடுகள் ஒன்றன் பின் ஒன்றாக விலக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 26 ஆண்டுகளாக பெண்கள் கார் செலுத்த இருந்த தடையை 2018 இல் சவுதி அரேபிய அரசு நீக்கியது. இதேபோல், கால்பந்தாட்டப் போட்டிகளைப் பார்க்க பெண்களுக்கு இருந்த தடையும் விலக்கப்பட்டது.

வரலாற்றிலேயே முதன் முதலாக ஒரு பெண் தூது வரை சவுதி அரேபியா நியமனம் செய்தது. சவுதி அரேபியாவின் இளவரசி ரீமா பின்ட் பான்டர் அல் சவுத் அமெரிக்காவுக்கான தூதுவரானார். இதேபோன்று தொலைக்காட்சிக் செய்தி வாசிப்பாளர் போன்ற பல பொது வெளிப் பணிகளில் பெண்கள் நியமிக்கப்படுவதற்கு இருந்த முட்டுக்கட்டைகளும் அகற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

டெடி பியர் உடையில் நடந்துசென்று நிதி சேகரிக்கும் அமெரிக்கர்

அமெரிக்காவில் டெடி பியர் உடையை அணிந்து கொண்டு 644 கி.மி. நடந்து சென்று ஒரு தொண்டு நிறுவனத்துக்கு நிதி சேகரித்துவரும் நபருக்கு பாராட்டுகள் குவிந்துவருகின்றன.

அமெரிக்காவைச் சேர்ந்த 33 வயதான ஜெஸ்ஸீ லாரியோஸ், டெடி பியர் உடையை அணிந்துகொண்டே லொஸ் ஏஞ்சல்ஸிலிருந்து சான் ஃபிரான்சிஸ்கோ வரை 644 கி.மி. தூரம் நடந்துசென்று, ஒரு பொது நோக்கத்துக்காக நிதி திரட்டி வருகிறார். தற்போதுவரை 7,000 டொலர்களுக்கும் அதிகமாக இவர் நிதி சேகரித்துள்ளார்.

நிதி திரட்டவேண்டும் என்ற முயற்சியில் இறங்கிய அவருக்கு டெடி பியர் உடையை அணியத் தூண்டியது எது என்பது தெரியவில்லை என்கிறார். ஆனால் அந்த உடையுடன் நடந்துசென்ற கதாபாத்திரத்துக்கு பியர்சன் என்று பெயர் வைத்துள்ளார். இந்த திட்டம் தனக்கு திடீரெனத்தான் தோன்றியதாகவும், தான் எதையும் திட்டமிடவில்லை எனவும் அவர் கூறுகிறார்.

ஏப்ரல் 12 ஆம் திகதி ஜெஸ்ஸீ தனது பயணத்தை தொடங்கியதிலிருந்து சில நாள்களிலேயே அவருக்கு உலகம்முழுவதுமிருந்துரசிகர்கள்கிடைத்திருக்கின்றனர்.

'GoFundMe' என்ற கணக்கைத் தொடங்கி அதில்தான் தற்போதுவரை இவர் நிதியைச் சேகரித்துள்ளார்.

ஆனால், அவர் யாருக்காக அல்லது எந்த திட்டத்துக்காக இந்த நிதியை சேகரிக்கிறார் என்ற தகவலை இதுவரை வெளியிடவில்லை. தான் சான் பிரான்சிஸ்கோவை அடைந்தபிறகுதான் அதுகுறித்த விவரங்களை வெளியிடுவேன் என இவர் கூறியிருக்கிறார்

அண்மைய நாள்களில், ஜெஸ்ஸீயைப் போன்று நிறையப்பேர் தொண்டுநிறுவனங்களுக்கு நிதி சேகரிக்க பல கி.மீ. தூரம் நடந்தே செல்கின்றனர். கடந்த ஆண்டு லண்டனில் 10 வயதுச் சிறுவன் ஒருவன் 2,800 கி.மீ நடந்தே சென்று தனது பாட்டிக்காக நிதி சேகரித்தமை பரபரப்பான செய்தியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் மாலைப்பதிப்பு

சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றத் தவறும் பள்ளிவாசல்கள் தற்காலிகமாக மூடப்படும்

கொவிட் 19 செயலணி மற்றும் சுகாதார அமைச்சு வழங்கியுள்ள சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றத் தவறும் பள்ளிவாசல்களை நோன்பு முடியும்வரை மூடுவதற்கு வக்பு சபை தீர்மானித்துள்ளது.

நாட்டின் பல பகுதிகளில் அநேகமான பள்ளிவாசல்களில் கொவிட் 19 தொடர்பான சுகாதார வழிகாட்டல்கள் மீறப்படுவதாகவும் பெரும் எண்ணிக்கையானோர் பள்ளிவாசல்களுக்குள் சுகாதார வழிகாட்டல்களை அசட்டை செய்வதாகவும் வக்புசபைக்கு ஆதாரங்களுடன் முறைப்பாடுகளை முன்வைத்திருப்பதனாலேயே இவ்வாறான தீர்மானமொன்றை மேற்கொள்ள வேண்டியேற்பட்டுள்ளது என வக்பு சபையின் தலைவர் சட்டத்தரணி சப்ரி ஹலீம்தீன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் அண்மையில் சுகாதார அமைச்சு நோன்பு காலத்தில் பள்ளிவாசல்களில் சுகாதார வழிகாட்டல்கள் தொடர்பில் சுற்றிக்கையொன்றை வெளியிட்டிருந்தது.

அவ் அறிக்கையில் பள்ளிவாசல்களில் ஜமாஅத் தொழுகைகளில் 100 பேருக்கு உட்பட்டவர்களே தொழ முடியும். ஒவ்வொருவரும் வீட்டிலிருந்து முஸல்லாக்களை எடுத்து வர வேண்டும். வீடுகளிலே வுழூச் செய்து வரவேண்டும்.

ஒவ்வொருவரும் மாஸ்க் அணிந்திருக்க வேண்டும். ஒரு மீற்றர் இடைவெளி பேணப்படவேண்டும். பள்ளிவாசலுக்குள் நுழையும் ஒவ்வொருவரதும் உடல் உஷ்ண நிலை சோதிக்கப்படவேண்டும் என்பன உட்பட பல நிபந்தனைகள் குறிப்பிடப்பட்டிருந்தன.

ஆனால் இவைகளில் எவையும் பின்பற்றப்படுவதில்லை என வக்பு சபைக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. கஞ்சி விவகாரமும் சுற்றறிக்கையின்படி பேணப்படுவதில்லையென குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. கஞ்சி பள்ளிவாசலுக்கு வெளியே வழங்கப்படவேண்டுமென சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விவகாரமும் பின்பற்றப்படாது அலட்சியம் செய்யப்பட்டுள்ளது.

இதற்கான ஆதாரங்கள் புகைப்படங்கள் மூலம் வக்பு சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான சூழ்நிலையில் நாட்டில் கொவிட் 19 மூன்றாவது அலை உருவாக காரணமாக இருந்தமை என்ற குற்றச்சாட்டு எம்மீது சுமத்தப்படலாம்.

அதனால் பள்ளிவாசல்கள் நோன்பு காலத்தில் வழங்கப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டல்களை முழுமையாக கண்டிப்பாக பின்பற்றவேண்டும். பள்ளிவாசல்களில் சுகாதார வழிகாட்டல்கள் மீறப்படுகின்றமைக்கு பள்ளிவாசல் நிர்வாகங்களே பொறுப்புக் கூறவேண்டும். இவ்வாறான நிலையில் வக்புசபை குறிப்பிட்ட பள்ளிவாசல்களை மூடாமல் இருப்பதற்காக வக்பு சபைக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார்.

மேலும் 17 தொற்றாளர்கள் திருகோணமலையில் பதிவு

திருகோணமலை மாவட்டத்தில் இன்றுவரைக்கும் 17 கொவிட் 19 தொற்றாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர் என திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வீ.பிரேமானந்த் தெரிவித்தார்.

திருகோணமலையில் உள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இன்று இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போது இவ்வாறு தெரிவித்த அவர் – கொவிட் – 19 நிலைமைகள் தொடர்பில் மேலும் விளக்கமளிக்கையில் திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 7, உப்புவெளி 3, குச்சவெளி 4, கிண்ணியா 2, கந்தளாய் 1 என்ற வாறாக கொவிட்19 தொற்று அதிகரித்துள்ளது.

இதில் திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலையில் உள்ள 5 தாதியர்களுக்கும் கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் அதில் ஒருவர் ஏற்கனவே கொவிட் தடுப்பூசிப் பெற்றுக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை நகர் பகுதியில் நேற்றைய தினம் இணங் காணப்பட்டதில் மூன்று பாடசாலைகளில் இருந்து மாணவன் மற்றும் ஆசிரியர் இருவர்களுக்கும் தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

தனியார் கல்வி நிலையங்களை மூடுவதற்கான நடவடிக்கைகளையும் ஆலோசித்து வருவதாகவும் மேலும் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று கடற்கரை பிரதேசத்தை சுத்தப்படுத்தும் புதிய வேலைத்திட்டம்

அக்கரைப்பற்று கடற்கரை பிரதேசத்தை சுத்தப்படுத்தும் வேலைத்திட்டம் கடந்த வியாழக்கிழமை அக்கறைபற்று மாநகர சபை முதல்வர் அதா உல்லா அகமட் ஸகியின் தலைமையில் இடம்பெற்றது.

நாளாந்தம் கடற்கரைக்கு வருகை தரும் பொதுமக்கள் விட்டுச்செல்லும் திண்மக்கழிவுகள் மற்றும் குப்பைகளால் அக்கரைப்பற்று கடற்கரை பிரதேசம் மாசுபட்டிருக்கும் நிலையில் அவற்றினை அகற்றும் பொருட்டு அன்றையதினம் முதல்வரால் காத்தான்குடி நகர சபையில் இருந்து கடற்கரை துப்பரவாக்கி இயந்திரம் வரவழைக்கப்பட்டு இப்பணிகள் நடந்தேறியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதன் போது கருத்து தெரிவித்த அக்கரைப்பற்று மாநகர சபை முதல்வர் கடற்கரை பிரதேசத்தை சுத்தப்படுத்தும் வகையில், குறித்த இயந்திரத்தை வழங்கி உதவிய காத்தான்குடி நகர சபை தவிசாளர் ஏ.எச்.எம். அஸ்பர்ருக்கு நன்றிகளை தெரிவித்தார்.

மேலும் அக்கரைப்பற்று கடற்கரையை தூய்மைப்படுத்தும் வேலைத்திட்டம் வாராந்தம் நடைபெறவுள்ள நிலையில், கடற்கரையை பயன்படுத்தும் பொதுமக்கள் அங்கு குப்பைகள் மற்றும் கழிவுப் பொருள்களை விட்டுச் செல்ல வேண்டாம் எனவும் மக்களை கேட்டுக்கொண்டார்.

ஆவது இதழ்

கொழும்பு மற்றும் கிழக்கிலும்

செம்மண்

வாசிக்கத் தவறாதீர்கள்

அனைத்து முகவர்களிடமும் கேட்டு வாங்குங்கள்

வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில்

சிறைக்குள்....

விலத்த வழியிருக்கோ

செயல்களின் விளைவுகள்

மீண்டும் அச்சுறுத்தல்

வாசகர்களின் நன்மதிப்பைப் பெற்ற பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு

ஐ.பி.எல். 2021 மும்பையை இலகுவாகப் பந்தாடிய பஞ்சாப்!

ஐ.பி.எல். 2021 தொடரின் 17 ஆவது லீக் போட்டியில், பஞ்சாப் கிங்ஸ் அணி 9 விக்கெட்டுக்களால் மும்பை இந்தியன்ஸ் அணியை வீழ்த்தியது.

சென்னையில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பஞ்சாப் கிங்ஸ் அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ள முடிவெடுத்தது.

முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றது. ரோஹித் சர்மா 63 ஓட்டங்களையும் சூர்ய குமார் யாதவ் 33 ஓட்டங்களையும் எடுத்தனர். பஞ்சாப் கிங்ஸ் அணியின் மொஹமட் ஷமி, ரவி பிஷ்னோய் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 132 என்ற இலகுவான வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய பஞ்சாப் கிங்ஸ் அணி, 17.4 ஓவர்கள் நிறைவில் ஒரேயொரு விக்கெட்டை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. கே.எல். ராகுல் ஆட்டமிழக்காது 60, கிறிஸ் கெய்ல் 43 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுக்கொண்டனர். மும்பை இந்தியன்ஸ் அணியின் ராகுல் சஹார் வீழ்த்தப்பட்ட ஒரே விக்கெட்டைக் கைப்பற்றியிருந்தார்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக பஞ்சாப் கிங்ஸ் அணித்தலைவர் கே.எல். ராகுல் தெரிவுசெய்யப்பட்டார். இந்த வெற்றியோடு பஞ்சாப் கிங்ஸ் அணி புள்ளிப் பட்டியலில் ஐந்தாமிடத்துக்கு நகர்ந்துள்ளது.

நடராஜன் அவுட்!

முழங்காலில் ஏற்பட்ட உபாதை காரணமாக ஐ.பி.எல்.2021 இலிருந்து வேகப்பந்து வீச்சாளர் நடராஜன் விலகியுள்ளார்.

சன்ரைசஸ் ஹைதராபாத் அணியின் வீரரான இவர், இம்முறை ஐ.பி.எல்லில் சன்ரைசஸ் விளையாடிய முதலிரு போட்டிகளில் மட்டுமே பங்கேற்றிருந்தார். அதன்பின்னர், முழங்கால் உபாதை காரணமாக விளையாடும் பதினொருவரில் இடம்பெறாமல் ஓய்விலிருந்தார். அவருக்குப் பதிலாக கலீல் அஹமட்டுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது.

சன்ரைசஸ் அணியின் தலைவர் டேவிட் வோர்னரிடம் நடராஜனின் காயம் பற்றிக் கேட்கப்பட்டபோது, 'அவரது காயம் பற்றி முழுமையாக அறிந்துகொள்ள ஸ்கானிங் செய்யவேண்டும். அதற்கு அவர் தற்போதைய பாதுகாப்பு வளையத்திலிருந்து வெளியேறினால் 10 நாள்கள் வரை தனிமைப்படுத்தப்பட்டே திரும்ப வேண்டியிருக்கும். அது பற்றி சிந்தித்து வருகிறோம்' என்று குறிப்பிட்டிருந்தார். அவர் அவ்வாறு குறிப்பிட்ட அடுத்த நாளிலேயே நடராஜன் தொடரிலிருந்து விலகுவதான அறிவிப்பு வெளியாகியுள்ளது.

கடந்த ஐ.பி.எல். தொடரில் சன்ரைசஸ் அணியின் பந்துவீச்சில் யோக்கர்களை வீசியும், இறுதி ஓவர்களில் எதிரணித் துடுப்பாட்ட வீரர்களைத் திணறடித்தும் கவனமீர்த்தவர் நடராஜன். அதனால், அவுஸ்திரேலியாவுக்குச் சென்ற இந்திய கிரிக்கெட் அணியில் வலைப் பயிற்சிப் பந்துவீச்சாளராக இணையும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.

அவுஸ்திரேலியாவில் அணியின் முக்கிய பந்துவீச்சாளர்கள் அடுத்தடுத்துக் காயமடைய, ரி20, ஒருநாள் சர்வதேசப் போட்டிகள், டெஸ்ட் போட்டி என்று மூன்று வகை கிரிக்கெட் போட்டிகளிலும் விளையாடும் வாய்ப்பு நடராஜனுக்குக் கிடைத்தது. அதனைச் சரியாகப் பயன்படுத்திக்கொண்டு நம்பிக்கையைப் பெற்றார். மூன்று வகை கிரிக்கெட்டிலும் ஒரே தொடரில் அறிமுகமான இந்திய வீரர் என்ற பெருமையும் அவருக்குக் கிடைத்தது.

அந்தத் தொடரின்போதே அவருக்கு முழங்கால் உபாதை ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், இது குறித்து அப்போது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை எந்த வித தகவலையும் வெளியிட்டிருக்கவில்லை. ஆனால், இந்தியா திரும்பிய பின்னர் இந்தக் காயத்தினால் அவர் அவதியுறுவது குறித்து தகவல்கள் வெளியாகியிருந்தன. அவருக்கு காயத்திலிருந்த மீள்வதற்கான சிகிச்சைகளும் பயிற்சியும் அளிக்கப்பட்டது. அதனால், இந்தியாவில் நடைபெற்ற இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் ஒரேயொரு ஒருநாள் போட்டியில் மட்டும் விளையாடும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.

ஐ.பி.எல். 2021 தொடரிலிருந்து முழங்கால் உபாதை காரணமாக விலகியிருக்கும் நடராஜன் உடனடியாகவே சிகிச்சைகளை ஆரம்பித்திடுவார் என்று நம்பப்படுகிறது. நடராஜனின் இழப்பு சன்ரைசஸ் அணியைப் பாதிக்கும் என்றாலும் புவனேஷ்வர் குமார், கலீல் அஹமட், சித்தார்த் கௌல், சந்தீப் சர்மா, பசில் தம்பி, ஜேசன் ஹோல்டர் போன்றோர் இருப்பதால் அவர்களால் ஓரளவுக்கு சமாளித்திட இயலும் என்று கருதப்படுகிறது.

இந்த சீசனில் நான்கு போட்டிகளில் விளையாடியிருக்கும் சன்ரைசஸ் அணி, ஒன்றில் மட்டுமே வெற்றிபெற்று புள்ளிப் பட்டியலில் ஆறாமிடத்திலிருக்கிறது.

பாகிஸ்தானுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்த சிம்பாப்வே

பாகிஸ்தான் அணிக்கெதிரான இரண்டாவது ரி - 20 போட்டியில், சிம்பாப்வே அணி 19 ஓட்டங்களால் அபாரமான வெற்றியைப் பெற்றுள்ளது. இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரை, 1 - 1 என்ற கணக்கில் சிம்பாப்வே அணி சமநிலை செய்துள்ளது.

ஹராரே மைதானத்தில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து, 118 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. கமுன்ஹீகாம்வே 34 ஓட்டங்களையும் சகாப்வா 18 ஓட்டங்களையும் எடுத்தனர். பாகிஸ்தான் அணியின் மொஹமட் ஹஸ்னெய்ன் மற்றும் டனிஷ் அஸிஸ் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 119 என்ற மிக இலகுவான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பாகிஸ்தான் அணி, 19.5 ஓவர்கள் நிறைவில் 99 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து படுதோல்வியடைந்தது. பாபர் அசாம் 41 ஓட்டங்களையும் டனிஷ் அஸிஸ் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

சிம்பாப்வே அணியின் லூக் ஜோங்வே 4 விக்கெட்டுக்களையும் ரயான் பேர்ல் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக லூக் ஜோங்வே தெரிவு செய்யப்பட்டார். இவ்விரு அணிகளுக்குமிடையிலான மூன்றாவதும் இறுதியுமான ரி20 போட்டி நாளை நடைபெறவுள்ளது.

பார்சிலோனா ஓபின் டென்னிஸ் தொடரில் ரபேல் நடால் அரையிறுதிக்கு முன்னேறினார்!

பார்சிலோனா ஓபின் டென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு காலிறுதிப் போட்டியில் ஸ்பெயினின் ரபேல் நடால் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இந்தப் போட்டியில் ஸ்பெயினின் ரபேல் நடால் பிரித்தானியாவின் கமரூன் நோரியை எதிர்கொண்டார். பரபரப்பாக நடைபெற்ற ஆட்டத்தில், முதல் செட்டை எவ்வித நெருக்கடியும் இல்லாமல் நடால் 6 - 1 என்ற கணக்கில் எளிதாகக் கைப்பற்றினார்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செட்டிலும் ஆதிக்கம் செலுத்திய நடால், செட்டை 6 - 4 எனக் கைப்பற்றி அரையிறுதிக்குள் நுழைந்தார்.

இன்று நடைபெறும் அரையிறுதிப் போட்டியில் நடால், சகநாட்டு வீரரான பப்லோ கரெனோ பஸ்டாவை எதிர்கொள்கிறார்.

ஐ.பி.எல்.2021 ராஜஸ்தான் - கொல்கத்தா போட்டி இன்று!

ஐ.பி.எல். 2021 தொடரின் இன்றைய போட்டியில் ராஜஸ்தான் ரோயல்ஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதவுள்ளன.

இந்த சீசனில் இதுவரை தலா நான்கு போட்டிகளில் விளையாடியிருக்கும் இவ்விரு அணிகளும் ஒவ்வொரு வெற்றியை மட்டுமே பெற்று, புள்ளிப் பட்டியலில் கடைசி இரு இடங்களையும் பிடித்துள்ளன.

மும்பையில் நடைபெறவுள்ள இந்தப் போட்டி இரவு 7.30க்கு ஆரம்பமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு

அரசியல் பழிவாங்கல்களை முன்னெடுப்பதற்கே அரசியல் பழிவாங்கல் ஜனாதிபதி ஆணைக்குழு!

அதை 'விசர் குழு' என சபையில் சரத் பொன்சேகா காட்டம்

எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பிரஜாவுரிமையை பறித்து அரசாங்கத்திற்கு எதிரான அழுத்தங்களில் இருந்து தப்பித்துக்கொள்ளவே அரசியல் பழிவாங்கல் ஜனாதிபதி ஆணைக்குழு உருவாக்கப்பட்டுள்ளது.

அது மட்டுமல்லாது பதினொரு மாணவர் படு கொலை, அவன்கார்ட் ஊழல் வாதிகள் என முக்கிய மான குற்றவாளிகளை விடுதலை செய்யும் நோக்கமும் இவர்களுக்கு உள்ளதென எதிர்க்கட்சி உறுப்பினர் சரத் பொன்சேகா சபையில் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை நடைபெற்ற அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசா ரணை அறிக்கைமீதான முதலாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

அரசியல் பழிவாங்கல் குறித்து ஆராய ஜனாதிபதி யினால் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவின் தலை வர் குறித்தும் இந்த ஆணைக்குழு குறித்தும் நாட்டிற்கு 'விசர்பூனை' ஆணைக்குழு எனக் கூறினால்தான் தெரியும்.

அந்தளவு மோசமான, கிறுக்குத்தனமான ஆணைக் குழுவாகும். நீதிமன்றத்தைப் பலவீனப்படுத்தி, சட்டத்தை ஆணைக்குழு கையில் எடுக்கும் விதமாகவே இது அமைந்துள்ளது.

இந்த ஆணைக்குழு மூலமாக எதிர்காலத்தில் எடுக்கும் நடவடிக்கைகள் குறித்தே இன்று பிரச்சினை எழுகின்றது.

ஆணைக்குழு அறிக்கைக்கு அமைய நல்லாட்சி அரசாங்கத்தின் அமைச்சர்கள் மற்றும் ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் பிரஜாவுரிமை பறிக்கப்படும் நிலைமையொன்று நாடாளுமன்றத்தின்

ஊடாகமுன்னெடுக்கஅரசாங்கம்முயற்சிக்கின்றதுஎனஎமக்கு தெரியவருகின்றது. இதற்கு அரசாங்கத்தில் உள்ள பலருக்கு விருப்பமில்லை என்பதும் எமக்கு தெரியும்.

எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பிரஜாவுரிமையை பறிப்பது ஜனநாயக செயற்பாடு அல்ல, இந்த செயற் பாடுகள் பயந்த, பலவீனமான அரசியல் நகர்வுகள் என்றே நாம் கருதுகின்றோம். இந்த ஆணைக்குழுவின் நோக்கம் என்னவெனில், முன்னைய ஆட்சிக்காலத்தில் குற்றவாளிகள் என அடையாளம் காணப்பட்டு தற் போது சிறையில் உள்ளவர்கள் மற்றும் குற்றம் சுமத் தப்பட்டுள்ளவர்களை விடுவிப்பதாகும். முக்கியமாக முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட மற்றும் அவருடன் நெருக்கமாக செயற்பட்ட தசநாயக, சுமித் ரணசிங்க ஆகியோருக்கு எதிராக குற்றச்சாட்டு ஒன்று உள்ளது.

பாடசாலை மாணவர்கள் 11 பேரை கடத்தி அவர்க ளின் பெற்றோரிடம் கப்பம் கேட்ட குற்றச்சாட்டு. இதில் தமிழ் சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் இருந்தனர். இந்த உண்மைகள் வெளிவந்த நேரத்தில் அவர்களைக் கொலை செய்து கடலில் போட்டனர்.

இவ்வாறான சம்பவம் இன்று ஆட்சியில் உள்ளவர்க ளின் குடும்பத்தினருக்கு நடந்தால் எவ்வாறு இருக்கும்? இவ்வாறான நபர்களை விடுதலை செய்ய ஜனாதிபதி ஆணைக்குழு பரிந்துரைப்பது ஏற்றுக்கொள்ளக் கூடிய விடயமா? இதுவா சட்ட நியாயாதிக்கம்? இவ்வாறான செயற்பாடுகளை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

அதேபோல் அவன்கார்ட் நிறுவன தலைவர் நிஸ் ஸங்க சேனாதிபதி போன்றவர்களை விடுதலை செய் யவும் ஆணைக்குழு வலியுறுத்துகின்றது. இவர்களைக் காப்பாற்ற அன்றும் எமது தரப்பில் இருந்த சட்டத் தரணிகள் முன்வந்தனர். அவர் இன்று ஜனாதி பதியுடனும் மோதிக்கொண்டுள்ளார்.

அதேபோல் மரண தண்டனை கைதியான துமிந்த சில்வாவை விடுதலை செய்யக்கோரியும் இந்த விசர் ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது. அதே போல் சுனில் ரத்நாயக்க உள்ளிட்ட இராணுவத்தினர் கடந்த 2000 ஆம் ஆண்டில் செய்த எட்டுப்பேர் கொலை, அவர்களை தாக்கி தலைகளை வெட்டிய சம்பவம் தொடர்பில் அவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டது.

ஓர் இராணுவ சிப்பாயாக இருக்கலாம், அல்லது இராணுவ அதிகாரி என்பதற்காக அநாவசியமான கொலைகளை செய்தவர்களை விடுதலை செய்ய முடியாது. அதே போல் குற்றவாளிகளை விடுதலை செய்து விட்டு இராணுவ வீரர்களை பாதுகாத்தோம் என கூறவும் முடியாது. இதனை எவரும் ஏற்றுக்கொள்ள முடியாது, கொலைகாரர்களை விடுதலை செய்துவிட்டு எவராலும் புகழாரம் சூட்டிக்கொள்ள முடியாது. – என்றார்.

ராஜபக்ஷக்கள் அரசு தன் இருப்பைத் தக்க வைக்கவே அரசியல் பழிவாங்கல் ஆணைக்குழுவை அமைத்துள்ளது

கடுமையாகச் சாடுகின்றார் சுமந்திரன் எம்.பி.

கோட்டாபய–மஹிந்ததலைமையிலானஅரசாங்கம் தனது இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்காக அரசியல் பழிவாங்கல் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவை அமைத்துள்ளது என தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பிரஜாவுரிமையை பறிக்க முயற்சிக்கும் அரசாங்கம், தனது வரம்பை மீறு வதற்கு முற்படுகின்றது எனக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நீதித்துறையால் புறக்கணிக்கப்பட்ட ஒரு சிலரை அரசாங்கம் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப் பினர்களாக நியமித்துள்ளது என அவர் சுட்டிக்காட் டியுள்ளார்.

இந்த ஆணைக்குழு அரச ஊழியர்கள், அரசியல் வாதிகள், சம்பவத்துடன் தொடர்புடையவர்களிடம் வாக்குமூலங்களை பெறுவதற்கு அப்பால் ஏனையோ ரிடம் விசாரணைகளை நடத்துவதாகவும் சுமந்திரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

குறித்த ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசத்துரை சந்தி ரகாந்தன், தன்மீது அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, அரசியல் பழிவாங்கல் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழு சட்டத்திற்கும், நீதிக்கும் அப்பால் சென்று செயற்பட்டுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேலும் தெரிவித்துள்ளார்.

அங்கீகரிக்கப்படாத பேஸ்புக் கணக்குகளை கட்டுப்படுத்த சட்டம் அறிமுகப்படுத்தப்படும்

அமைச்சர் சரத் வீரசேகர கூறுகின்றார்

நாட்டில் இயக்கப்படும் சுமார் 1,000 அங்கீகரிக்கப்படாத பேஸ்புக் கணக்குகளை கட்டுப்படுத்த சட்டங் கள் அறிமுகப்படுத்தப்படும் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரி வித்துள்ளார்.

இந்த பேஸ்புக் கணக்குகளுக்கு இன்றுவரை உரிமையாளர்கள் இல்லை, எனவே இதுபோன்ற கணக் குகள் விரைவில் செயலிழக்க புதிய விதிமுறைகள் அறிமுகப்படுத்தப் படும்என அவர்சுட்டிக்காட்டியுள்ளார்.

தண்டனைச் சட்டத்தில் உள்ள

விதிகளின் அடிப்படையில் சட் டங்கள் அறிமுகப்படுத்தப்படும் என வும் அவர் கூறியுள்ளார்.

மேலும் சமூக ஊடக தளங்க ளைக் கண்காணிப்பதை நோக்கமா கக் கொண்ட சட்டங்களை அறிமுகப் படுத்த அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது எனவும் அவர் கூறி யுள்ளார்.

ஒரே ஒரு பேஸ்புக் கணக்கை மட் டுமே இயக்க ஒரு நபருக்கு அதிகா ரம் வழங்கப்பட்டுள்ளது, ஆனால் தற்போது இதுபோன்ற பல கணக் குகள் ஒரு நபரால் இயக்கப்படுகின் றன என அமைச்சர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், சமூக ஊடக தளங்களைப் பயன்படுத்துவதை தடைசெய்ய அரசாங்கம் முயற்சிக்க வில்லை என அவர் மேலும் தெரிவித் துள்ளார்.

மைத்திரி தரப்பினருடன் கலந்துரையாடிய பஸில்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷ, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர்களுடன் அவசர கலந்துரையாடல்களை நடத்தினார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பு கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்றதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட் டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன, பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர, அமைச்சர்க ளான நிமல் சிறிபாலா டி சில்வா, மஹிந்த அமரவீர மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கீழ் மட்ட உறுப்பினர்களுக்கு இடமளிக்கத் தவறியமை தொடர்பில் பஸில் ராஜபக்ஷவிடம் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

இந்நிலையில், இந்த விடயம் தொடர்பாக கட்சியிடமிருந்து திட்டங்களை சமர்ப்பிக்குமாறு பசில் ராஜபக்ஷ, அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் கேட் டுக்கொண்டுள்ளார் என அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுவதியைப் பின்தொடர்ந்து சென்று யாழில் மோட்டார் சைக்கிள் எரிப்பு

யாழ்ப்பாணம் நகரில் வணிக நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் இளம் பெண்ணின் மோட்டார் சைக்கிள் எரியூட்டப்பட்டுள்ளது. ஆனைக்கோட்டை பகுதியில் வைத்து இந்தச் சம்பவம் நேற்று வெள் ளிக் கிழமை மாலை 6.45 மணியளவில் இடம்பெற் றுள்ளது.

ஆனைக்கோட்டை மூன்றாம் கட்டையைச் சேர்ந்த 24 வயதுடைய இளம் பெண் வேலை முடிந்து வீடு திரும்பிய போது பின் தொடர்ந்து சென்ற மூவர் அடங்கிய கும்பல் அவரை வழிமறித்து தடுத்துள்ளது.

அவர்களிடமிருந்து தப்பிக்க மோட்டார் சைக்கிளை வீதியில் கைவிட்டு வீடொன்றுக்குள் குறித்த பெண் சென்ற போதே மோட்டார் சைக் கிளுக்குத் தீ வைக்கப்பட்டுள்ளது என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸா ருக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப் படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்ப டுகின்றன.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt.Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.04.2021 இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org